2018 ஜூன் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடியிருப்புகள் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் உறுப்பினரின் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, தேவைப்படின்' நிதியாதாரத்தைக் கணக்கில் கொண்டு, வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

140—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***9631—திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு 279.51 இலட்சம் ரூபாய் அளவில் திட்ட மதிப்பீடு பெறப்பட்டுள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகம் என்பது 19 கிராமங்களையும் ஒரு நகராட்சியையும் கொண்டதாகும். தமிழ்நாட்டிலேயே அமையப் பெற்ற முதல் நகராட்சி செங்கோட்டையாகும். இது 1956 ஆம் ஆண்டு கேரள மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்ட காலத்திலிருந்தே நம்மோடு இருக்கக்கூடியதாகும். இதற்கான கட்டடம் குறித்து பல்வேறு பரிந்துரைகள் எல்லாம் பெறப்பட்டிருக்கின்றன. 1993 ஆம் ஆண்டு தீ விபத்துகூட ஏற்பட்டது, அதன் பின் புனரமைக்கப்பட்டது. இதனை முழுமையான புதிய கட்டடமாக அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனை விரைவாகச் செய்ய வேண்டும். அதற்குப் பக்கத்திலேயே சர்வே எண் 1213-ல் 26 சென்ட் இடம் இருக்கிறது. அதிலே ஒரு புதிய கட்டடத்தை அமைத்தால், ,அந்தப் பகுதி மக்களுக்கு எல்லாம் மிகவும் பயன்தரத்தக்கதாக இருக்கும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய இடத்திலேயே தற்போது கட்டடத்திற்கான முன்மொழிவுகளெல்லாம் பெறப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர் சுட்டிக்காட்டுகிற இடம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு, அது தகுந்த இடமாக இருப்பின், அதே இடத்தில் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2018 ஜூன் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தாலுகா என்பது மறைந்த முதல்வர் அவர்கள் உருவாக்கியது ஆகும். 33 வருவாய்க் கிராமங்களையும் மற்றும் 2 நகராட்சிகளையும் உள்ளடக்கிய கடையநல்லூர் தாலுகா அலுவலகமானது, கடையநல்லூர் நகர எல்லையிலேயே அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் பலவாறாக 2 வருடங்களாகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். மறைந்த முதல்வர் அவர்கள்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடைய பரிந்துரைகள் கனிவோடு பரிசீலிக்கப்படும் என்பதை வருவாய்த் துறை அமைச்சர் மூலமாகத் தெரிவித்தார்கள். அம்மா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறந்துவிட்டாரோ, என்னவோ தெரியவில்லை. தொடர்ந்து அதை வலியுறுத்தி வருகின்றேன். தயவுகூர்ந்து, தனிப்பட்ட யாருடைய விருப்பு, வெறுப்பும் இல்லாமல் ஒட்டுமொத்த மக்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு, புதிய தாலுகாவை அமைத்துத் தந்த அம்மையார் அவர்களுடைய விருப்பத்திற்கு இணங்க, கண்டிப்பாக நீங்கள் கடையநல்லூர் புதிய தாலுகா அலுவலகத்தை, கடையநல்லூர் நகர எல்லையிலேயே அமைத்துத் தர வேண்டும் என்பதை எங்களுடைய பாமர மக்களின் சார்பாக மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கோரிக்கையை வைக்கின்றபொழுது, ஒரு விவரத்தை அதில் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் சுட்டிக்காட்டியதை மறந்து விட்டாரோ என்று சொல்கிறார். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழர் குலம் காத்த அம்மா அவர்கள் சுட்டிக்காட்டியதை எங்கள் உடலில் கடைசி சொட்டு இரத்தம் இருக்கின்றவரை (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் கடைப்பிடிப்போம் என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே,*

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் உறுதுணையோடு இருக்கும் அம்மாவுடைய அரசு, வரலாற்றுச் சாதனையெல்லாம் இன்றைக்கும்கூட நிகழ்த்திக் கொண்டிருப்பதை அவர்கள் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலங்களிலெல்லாம் நிலுவையில் இருந்த காவேரி பிரச்சினையாக இருக்கட்டும், ஸ்டெர்லைட் பிரச்சினையாக இருக்கட்டும், பத்திரப் பதிவாக இருக்கட்டும் அத்தனை பிரச்சினைகளுக்கும் அம்மாவினுடைய ஆன்மாவின் ஆசியோடு இன்றைக்கு நிரந்தரத் தீர்வை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வழியிலே நாங்களும் சென்று கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனது வைத்தால், கடையநல்லூரிலே உடனடியாக தாலுகா அலுவலகம் கட்டும் பணியைத் துவங்கலாம். அதற்கு நிதியெல்லாம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒதுக்கீடு செய்துவிட்டார்கள். அவர் சுட்டிக்காட்டுகிற இடம் என்பது நீர்நிலைப் புறம்போக்கிலே வருகிறது. தற்போது உச்ச நீதிமன்றத்தின் தடையாணை இருக்கின்ற காரணத்தினாலே அந்த நீர்நிலையிலே அரசுக் கட்டடமோ, தனியார் கட்டடமோ, எந்தக் கட்டடமும் எழுப்ப முடியாது. தற்போது அரசால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிற இடத்திலே கல்லூரிகள் வருகின்றன, பல்வேறு அரசு கட்டடங்கள் வருகின்றன. அதுவும் 3 கி.மீ. என்ற அளவில்தான் அந்த இடம் அமைந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைத்தால், நாளையே பூமி பூஜை போடுவதற்குத் தயாராக இருக்கிறோம் நிதி ஒதுக்கீடும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவருடைய ஒப்புதலுக்காகத்தான் தற்போது தொடர் ஆய்விலே அது நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, நிச்சயமாக அம்மாவினுடைய அரசு, இன்றைக்கு மக்களுடைய சௌகரியத்திற்கு, மக்களுக்கேற்ற இடங்களிலேதான் வட்டாட்சியர் அலுவலகங்களை அமைத்து வருகிறது. வேறு இடம் இருந்தால்கூட பரவாயில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலில் சுட்டிக்காட்டிய இடம் நீர்நிலைப் புறம்போக்கு என்ற தகவல் மாவட்ட நிருவாகத்திலிருந்து பெறப்பட்டிருக்கிறது. அதை என்னால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். கடையநல்லூர் என்பது ஒரு thickly populated area. அங்கே

2018 ஜூன் 6]

வேறு இடமே இல்லை. ஆனாலும், தற்போது குறிப்பிட்டிருக்கிற இடம் என்பது அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ வட்டாட்சியர் அலுவலகத்தை மட்டும் தனியாகக் கொண்டுபோய்க் கட்டவில்லை. ஏற்கெனவே கல்லூரி கட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு அரசு அலுவலகக் கட்டடங்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் வட்டாட்சியர் அலுவலகத்தையும் கட்டலாம். அதுவும் 3 கி.மீ. என்ற அளவில்தான் இருக்கிறது. இதுவரையில் வரலாற்றிலே இல்லாத வகையிலே, தேவையான இடங்களில் எல்லாம் புதிய வட்டங்களைப் பிரித்துக் கொடுத்து, ஒரு வரலாற்றுச் சாதனை படைத்தவர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன, சொல்லுங்கள், அதில்* clarification *ஒன்றும் இல்லை. சரி, கேளுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 11-25

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நீர்நிலைப் புறம்போக்கு என்பது ஒரு சாபமாகப் போய்விட்டது. பல ஊர்களில் நீர்நிலைகள் ஒன்றுமே கிடையாது. யார், யாரோ எப்போதோ வெட்டி வைத்த கால்வாய்களெல்லாம் தூர்ந்து போய்விட்டன. ஆனால், எந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும் அது நீர்நிலைப் புறம்போக்கு என்று சொல்கிறார்கள். பள்ளிக்கூடமோ, கல்லூரியோ கட்ட வேண்டுமென்று இடத்தைக் காட்டினால், அது மேய்ச்சல் நிலம் என்று சொல்கிறார்கள். மேய்ச்சலும் கிடையாது; ஒன்றும் கிடையாது. ஆகவே, இதுகுறித்து நீதிமன்றத்தில் ஒரு* clarification *கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீர் ஓடிக்கொண்டிருந்தால், அதை நீர்நிலை என்று ஒத்துக்கொள்ளலாம். நீர் இல்லாமல் கால்வாயே தூர்ந்துபோயிருக்கிறது. இதுவும்கூட பழங்காலத்திலிருந்து* record-*ல்*

இருக்கிறது. இதையே காண்பித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்ய முடியவில்லை என்பதால், இதுகுறித்து நீதிமன்றத்தில் ஒரு clarification கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மூத்த உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். இதை நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். குளம், குட்டை, ஆறுகள் போன்றவை தூர்ந்து போயிருந்தாலும்கூட, எதிர்கால சந்ததியினருடைய நலன் கருதி, அவை மீண்டும் பராமரிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கொடுத்த ஆணையில் அறிவுறுத்தியிருக்கின்ற காரணத்தினால்தான், தூர்ந்துபோயிருந்தாலும்கூட நிலத்தடி நீர் ஆதாரத்தைப் பெருக்கி, நிலத்தடி நீரை நாம் தொடர்ந்து பெற்று வருகிறோம். இருந்தாலும், அவையின் மூத்த உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிவுரைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அது ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) எடுத்துக்கொள்கிறேன்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]